www.Padasalai.Net www.CBSEtips.in

N

நாமக்கல் மாவட்டம்

## இரண்டாம் இடைப்பருவத் தேர்வு, நவம்பர் - 2019

### பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம் : 1.30 மணி வணிகவியல் மதிப்பெண்கள்: 50

பிரிவு - I

குறிப்பு:- அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

I. சரியான விடையினை தேர்ந்தெடுக்கவும்:- 10×1=10

1) நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான் எப்.கென்னடி
இ) ரால்ப் நாடார் ஈ) ஜவஹர்லால் நேரு

2) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
அ) 01.01.1986 ஆ) 01.04.1986 இ) 15.04.1987 ஈ) 15.04.1990

3) ____________ என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்.
அ) நுகர்வோர் ஆ) மொத்த வியாபாரி
இ) உற்பத்தியாளர் ஈ) சில்லறை வியாபாரி

4) நுகர்வோரின் பொறுப்பு என்பது அவர் பெற்றுள்ள ____________ ஆவணமே பொருட்களை வாங்கியதற்கான அடையாளமாகும்.
அ) ரொக்க ரசீது ஆ) உத்தரவாத அட்டை
இ) இடாப்பு ஈ) மேற்காணும் அனைத்தும்

5) தேசிய நுகர்வோர் பிரச்சனைகள் குறைபாடு ஆணையம், பொருட்களின் / சேவைகளின் மதிப்பு குறைக்கப்படுதல் மற்றும் இழப்பீடு, ஏதாவது இருந்தால்
அ) 1 கோடி அதிகரிக்கிறது ஆ) 10 லட்சம் ரூபாய்
இ) ரூ.5 லட்சம் அதிகரிப்பு ஈ) 12 லட்சம் ரூபாய்

6) ____________ சூழலில் வானிலை மற்றும் காலநிலை நிலைமைகள் உள்ளன.
அ) நுண்தன்மை கொண்டது ஆ) பேரியல் தன்மை கொண்டது.
இ) குறைந்தபட்சமானது ஈ) அதிகபட்சமானது

7) ____________ புதிய தொழிற்துறைக் கொள்கையின் விளைவாகும். இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது.
அ) உலகமயமாக்கல் ஆ) தனியார்மயமாக்கல்
இ) தாராளமயமாக்கல் ஈ) இவற்றில் எதுவுமே இல்லை

8) பொருளின் மீதான உரிமை என்பது
அ) பொருளின் உடைமை ஆ) பொருளைப் பாதுகாத்தல்
இ) பொருளின் மீதான அனுபவ பாத்தியம் வைத்திருப்பவர்
ஈ) இவற்றில் எதுவும் இல்லை

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



9) மாற்றுமுறை ஆவணச் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

அ) 1981 ஆ) 1881 இ) 1994 ஈ) 1818

10) மாற்றுச்சீட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் எத்தனை பேர்?

அ) 2 ஆ) 6 இ) 3 ஈ) 4

## பிரிவு - II

குறிப்பு:- எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண். 15க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். **4×2=8**

11) கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

12) ஜான் எப்.கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?

13) மாநில ஆணையம் என்ற பதத்தை விவரிக்கவும்.

14) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்றால் என்ன?

15) சரக்கு விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகளைப் பட்டியலிடுக.

## பிரிவு - III

குறிப்பு:- எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண். 20க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். **4×3=12**

16) செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?

17) தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரி?

18) புதிய பொருளாதார கொள்கை பற்றி ஒரு சிறிய குறிப்பை எழுதுக.

19) தற்போதைய சரக்கு என்பதை விவரி?

20) மாற்றுச்சீட்டு மற்றும் கடனுறுதிச் சீட்டு வேறுபடுத்துக.

## பிரிவு - IV

குறிப்பு:- அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **4×5=20**

21) அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? (ஏதேனும் 5) **(அல்லது)**

ஆ) ஏதேனும் ஐந்து நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களை எழுதுக.

22) அ) நுகர்வோரின் உரிமைகள் யாவை? (ஏதேனும் 5) **(அல்லது)**

ஆ) தேசிய ஆணையத்தின் பணிகளை விளக்குக.

23) அ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக. (ஏதேனும் 5)

**(அல்லது)**

ஆ) தாராளமயமாக்குதல் நன்மைகள் மற்றும் தீமைகளை விவரி? (ஏதேனும் 5)

24) அ) நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக. **(அல்லது)**

ஆ) காசோலையின் இயல்புகள் கூறி விளக்குக. (ஏதேனும் 5)

*******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்), எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு(வட்டம்), நாமக்கல் (மாவட்டம்)-637 202.
அலைபேசி : 99655-31727, 99655-35967

## + 2 இரண்டாம் இடைப்பருவத் தேர்வு நவம்பர் -2019

**TENTATIVE ANSWER KEY**

**பாடம்: வணிகவியல்** **மதிப்பெண்:50**

| வினா எண் | பாடப்பொருள் | Marks |
|---|---|---|
| | பகுதி - I<br>உரிய விடையைக் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக. | 10x1=10 |
| 1. | இ)ரால்ப் நாடார் | 1 |
| 2. | இ) 15.04.1987 | 1 |
| 3. | அ)நுகர்வோர் | 1 |
| 4. | ஈ)மேற்காணும் அனைத்தும் | 1 |
| 5. | அ)1 கோடி அதிகரிக்கிறது | 1 |
| 6. | ஆ)பேரியல் தன்மை கொண்டது | 1 |
| 7. | இ)தாராளமயமாக்கல் | 1 |
| 8. | இ)பொருளின் மீதான அனுபவ பாத்தியம் வைத்திருப்பவர் | 1 |
| 9. | ஆ) 1881 | 1 |
| 10 | இ)3 | 1 |
| | பகுதி - II(எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும்)<br>வினா எண் 15 கட்டாயம் | 4x2=8 |
| 11. | **கலப்படம்:**<br>❖ பாலின் அடர்தன்மை மற்றும் வெளிர்நிறம் அதிகரிப்பதற்காக சோப்பு, சுண்ணாம்பு, யூரியா, காஸ்டிக்சோடா மற்றும் பல்வேறு வேதிப்பொருட்கள் சேர்க்கப்படுகின்றன.<br>❖ உணவு தானியங்களில் சிறிய கற்கள் சேர்க்கப்படுகின்றன. | 2 |
| 12. | **ஜான்.எப். கென்னடி :**<br>❖ திரு.ஜான் F கென்னடி அவர்கள், "அடிப்படையான நுகர்வோர் உரிமை என்பது,<br>❖ பாதுகாப்பில் உரிமை<br>❖ தகவல் பெறும் உரிமை<br>❖ தேர்ந்தெடுக்கும் உரிமை<br>❖ கேட்கும் உரிமை" | 2 |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | |
|---|---|---|
| 13 | **மாநில ஆணையம் :**<br>❖ இந்த ஆணையம் மாநில அளவில் செயல்பட்டுவருகிறது. இந்த அமைப்பை நுகர்வோர் குறைப்பாட்டு தீர்பாணையம் என அழைக்கப்படுகிறது. சரக்கு மற்றும் சேவைகள் தொடர்பாக எழும் புகார்கள் இந்த தீர்பாணையத்தின் செயல் எல்லைக்குள் அடங்கும்.<br>❖ விற்க்கப்பட்ட சரக்கில் ஏற்படும் பழுதுகள் மற்றும் தரக்குறைகள் மற்றும் நியாயமற்ற மற்றும் தடை செய்யும் வணிக நடைமுறைகளுக்கு நோக்கத்திற்காக வணிக நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு ஆணையம் என்ற பெயரில் துவங்கப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டுவருகிறது. | 2 |
| 14 | **சரக்கு மற்றும் சேவை வரி:**<br>❖ நாடு முழுவதும் சரக்குகள் மற்றும் சேவைகளில்மறைமுக வரியாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்பட்டுள்ளது. இது ஒரு விரிவான, பல கட்ட இலக்கு அடிப்படையிலானமதிப்பு கூட்டுவரியாகும். | 2 |
| 15. | **சரக்கு விற்பனை ஒப்பந்த்தின் அடிப்படை கூறு:**<br>❖ இருதரப்பினர்<br>❖ பொருளின் மீதானஉரிமை மாற்றம்<br>❖ சரக்கு / பொருள்<br>❖ விலை<br>❖ விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு | 2 |
| | **பகுதி - III (எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும்)**<br>**வினா எண் 20 கட்டாயம்** | **4x3=12** |
| 16. | **செயற்கை பற்றாக்குறை:**<br>❖ சில சூழ்நிலைகளில் வணிகர்கள் தங்களின் வணிக நிறுவனங்களின் சரக்குகளைஇருப்பு வைக்கும் இடங்களில் போதுமான அல்லது தேவைக்கு அதிகமான அளவு சரக்குகளைஇருப்பு வைத்திருந்தாலும் கூட தங்கள் கடைகளின் முகப்பில் இருப்பு இல்லை எனும் பெயர்ப்பலகையை வைக்கின்றனர்.<br>❖ பெட்ரோல் விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் இந்நிலையை காண முடியும். இத்தகைய சூழ்நிலைகளில் நுகர்வோர் தங்களின் தவிர்க்க இயலாத தேவையின் அடிப்படையில் அப்பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள்.<br>❖ இதன் மூலம் வணிகர்கள் நேர்மையற்ற முறையில் பெருலாபம் ஈட்டுகின்றனர். திரையரங்குகளில் அரங்கம் நிறைவு எனும் பெயரப்பலகை மாட்டப்பட்ட பின்னும் கள்ளச்சந்தையில் அதிக விலைக்கு தாராளமாக அனுமதி சீட்டுக்கள் கிடைக்கின்றன. | 3 |
| 17. | **தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள்:**<br>தேசிய குறை தீர்ப்பு ஆணையம் அறிவிப்பின் மூலம் நிறுவப்பட்ட இவ்வமைப்பின்.<br>❖ 5 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்கள்.<br>❖ அவர்களில் ஒருவர் நீதி துறையை சார்ந்தவராக இருக்க வேண்டும்.<br>❖ ஏனைய நபர்கள் பிறதுறைகளில், அறிவு, ஆற்றல், அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.<br>❖ இவ்வமைப்பில் பெண் உறுப்பினர் இருக்க வேண்டும் | 3 |


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | |
|---|---|---|
| 18. | **புதிய பொருளாதார கொள்கை:**<br>❖ தாராளமயமாக்கல்<br>❖ தனியார்மயமாக்கல்<br>❖ உலகமயமாக்கல்<br>❖ வணிகம் மற்றும் வரிவதிப்புத் தொடர்பான பொது உடன்பாடுகள் குறித்து டங்கள் கொடுத்த வரைவுத் திட்டத்தின் அடிப்படையில் உலகில் உள்ள பல்வேற நாடுகளின் செயல்படுத்தப்பட்ட பதிய பொருளாதார கொள்கைக்கு அடித்தளமாக விளங்கியது. ஆர்தர் டங்கள் (1932 -2005) 22,000 பக்கங்கள் கொண்ட ஒரு வரைவு ஆவனத்தை உலக வர்த்தக அமைப்பிற்கு சமர்ப்பித்தார். அதன் அடிப்படையில் உலகத்திலுள்ள பல்வேறு நாடுகள் தங்களுக்குறிய புதிய பொருளாதாராக் கொள்கையே மாற்றியமைத்துக்கொண்டனர் | 3 |
| 19. | **தற்போதைய சரக்கு:**<br>❖ ஒப்பந்தம் செய்யும் போது விற்பனையாளரின் கைவசம் உள்ள சரக்கு இருக்கின்ற சரக்கு. விற்பனை செய்ய முகவரின் வசம் ஒப்படைக்கப்பட்ட சரக்கும் அல்லது அடமானம் பெற்றவர் விற்கும் அடமான சொத்தும் இருக்கின்ற சரக்கு என்ற பொருளில் உள்ளடக்கம் பெறும்.<br>❖ ஒப்பிய சரக்கு<br>❖ உறுதிச் செய்யப்பட்ட சரக்கு<br>❖ உறுதியிடா சரக்கு | 3 |
| 20. | **மாற்றுச்சீட்டு மற்றும் கடனுறுதிச் சீட்டு( ஏதேனும் மூன்று)** | 3 |

| வஎண் | வேறுபாடுகளின் இயல்புகள் | மாற்றுச்சீட்டு | கடனுறுதிச் சீட்டு |
|---|---|---|---|
| 1. | உறுதிமொழி தன்மை | மாற்றுச் சீட்டு ஒரு நிபந்தனையற்ற முறையாவணம். | கடனுறுதிச் சீட்டு ஒரு நிபந்தனை அற்ற பணம் தருவதற்கான கடன் உறுதிமொழிப் பத்திரம். |
| 2. | தரப்பினர் | மாற்றுச் சீட்டில் மூன்று நபர்கள் இருப்பார்கள். வரைபவர், வரையப்பெற்றவர், பணம் பெறுபவர். | கடனுறுதிச் சீட்டில் இரண்டு தரப்பினர் மட்டுமேஇருப்பர். வரைபவர் மற்றும் பணம் பெறுபவர். |
| 3. | வரைபவர் | கடனாளர் மாற்றுச் சீட்டைவரைகிறார் | கடனாளி கடனுறுதிச் சீட்டைவரைகிறார். |
| 4. | தரப்பினர் அடையாளம் | எழுதுபவரும், பணம் பெறுபவரும் ஒரே நபராக இருக்கலாம். | கடனுறுதிச் சீட்டை வரைபவரே பணம் பெறுபவராக இருக்கமுடியாது. |
| 5. | பொறுப்பாக்கப் படும் வரிசை | மாற்றுச் சீட்டை எழுதியவரின் பொறுப்பு இரண்டாம் பட்சமானது. அதாவது மாற்றுச் சீட்டை ஏற்றவர் பணம் தராமல் மறுக்கும்போது மட்டுமே வரைபவரின் பொறுப்பு எழும். | கடனுறுதிச் சீட்டை எழுதியவரின் பொறுப்பு முதன்மையானது. |
| 6. | கொணர்பவர் பத்திரம் | மாற்றுச் சீட்டை கொணர்பவருக்கு கொடுக்கும்படி வரையலாம். | கடனுறுதிச் சீட்டை கொணர்பவருக்கு தருவதாக வரையச் சட்டம் தடைசெய்கிறது. |
| 7. | ஏற்பு | மாற்றுச் சீட்டைஎழுதப்பெற்றவரால் ஏற்கப்பட வேண்டும். | கடனுறுதிச் சீட்டைகடனாளியேஎழுதுவதால் அதனை |


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஏற்கஅவசியமில்லை | |
| | 8. | படிகள் | அயல்நாட்டு மாற்றுச் சீட்டுகள் மூன்று படிகளில் வரையப்படுகிறது. | கடனுறுதிச் சீட்டு ஒரு படியில் மட்டுமேஎழுதப்படுகிறது. | |
| | 9. | நிபந்தனைக்கு உட்படுதல் | மாற்றுச் சீட்டினை நிபந்தனைக்கு உட்படுத்தி எழுதலாம். | கடனுறுதிச் சீட்டைஅப்படி எழுதமுடியாது. | |
| | 10. | அவமதிப்பு அறிவிப்பு | மாற்றுச் சீட்டுக்கு பணம் செலுத்த கடனாளி தவறும் போது முறைப்படி உடையவர் மேலெழுதியவர்களுக்கு அல்லது வரைந்தவருக்கு, மாற்றுச் சீட்டு அவமதிக்கப்பட்டசெய்தியை அறிவிக்கவேண்டும். | கடனுறுதிச் சீட்டு மறுக்கப்பட்டால் அவமதிப்பு அறிவிப்பு தேவையில்லை. | |

| | | |
|---|---|---|
| | **பகுதி - IV** | **4x5=20** |
| 21. | **நுகர்வோர் சுரண்டப்படுதல் ( ஏதேனும் ஐந்தினை விவரி)**<br>❖ அதிக விலைக்கு விற்றல்.<br>❖ கலப்படம்<br>❖ செயற்கையான பற்றாக்குறை<br>❖ தரக்குறைவு<br>❖ இடர்பாடு கொண்ட பொருட்கள்<br>❖ உத்தரவாதம் மற்றும் சேவைகள்<br>❖ தகுதியற்ற பொருட்கள்<br>❖ பொய் விளம்பரங்கள் | **5** |
| | **(அல்லது)**<br>**நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்( ஏதேனும் 5)**<br>❖ இந்திய ஒப்பந்தச் சட்டம் 1982. இச்சட்டம் மக்கள் ஒப்பந்தங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதை உறுதி செய்கின்றது.<br>❖ வேளாண்பொருட்கள் தரப்படுத்துதல் மற்றும் விற்பனைச் சட்டம் 1937. இச்சட்டம் வேளாண்மை உற்பத்திப் பொருட்களை நல்ல தரத்துடன் வழங்குவதை உறுதி செய்கின்றது.<br>❖ எடை மற்றும் அளவுகள் சட்டம் 1958. இச்சட்டம் எடை குறைவு மற்றும் அளவுக் குறைபாடுகளைப் போக்கி நுகர்வோரைப் பாதுகாக்கிறது. இச்சட்டம் அளவியல் சட்டம் 2009 ஆக திருத்தியமைக்கப்பட்டது.<br>❖ வணிகக் குறிகள் சட்டம் 1999. இச்சட்டம் பொருட்களில் மோசடியான வணிகக்குறிகளிடுவதை தடை செய்கின்றது.<br>❖ காற்று மாசுபடுதல் தடைச்சட்டம், 1981 இச்சட்டம் இந்தியாவில் காற்று மாசடைவதை தடுத்து சுற்றுச் சூழலைப் பாதுகாக்கின்றது.<br>❖ பொது பொறுப்புக் காப்பீட்டுச் சட்டம், 1991. ஊறுவிளைவிக்கும் பொருட்களை கையாளும் போது ஏற்படும் விபத்துக்களுக்கு உடனடி நிவாரணம் பெறுவதை இச்சட்டம் உறுதி செய்கின்றது.<br>❖ போதைப் பொருட்கள் மற்றும் மனவியல் பொருட்கள் சட்டம், 1985. இச்சட்டம் போதைப் பொருட்களை தயாரிப்பதை தடை செய்கின்றது. | |


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | |
|---|---|---|
| 22. | **நுகர்வோரின் உரிமைகள் ( ஏதேனும் ஐந்தினை விவரி)**<br>❖ உடல்நல பாதுகாப்பு உரிமை மற்றும் பாதுகாப்பிற்கான உரிமை<br>❖ தகவல் பெறும் உரிமை<br>❖ தேர்ந்தெடுக்கும் உரிமை<br>❖ செவிமடுக்கும் உரிமை<br>❖ நிவாரணம் காணும் உரிமை<br>❖ நுகர்வோர்கல்வி உரிமை<br>❖ வாழ்க்கைத் தர உரிமை<br>❖ நுகர்வோர்பாதுகாப்பு உரிமை<br>❖ அடிப்படைதேவைகளுக்கான உரிமை | 5 |
| | **(அல்லது)**<br>**தேசிய ஆணையத்தின் பணிகள்**<br>❖ இவ்வமைப்பு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 ன் கீழ் ஒரு பகுதி நீதிமன்றமாக 1988 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைமையலுவலகம் புதுடெல்லியில் இயங்கி வருகிறது.<br>❖ இவ் தீர்ப்பாணையம் உச்சநீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற நீதிபதியை தலைவராக கொண்டு இயங்கி வருகிறது. இவ் அமைப்பு தேசிய தீர்பாணையம் என்றும் அழைக்கப்பட்டு வருகிறது.<br>**அதிகார எல்லை**<br>நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 21 ன் கீழ் குறிப்பிடபட்டுள்ள அதிகாரம் பெற்றுள்ளது.<br>❖ ரூபாய் 1 கோடிக்கு எஞ்சிய புகார் மனுக்களை விசாரித்தல்.<br>❖ மேல் முறையீட்டின் மனுவினை விசாரித்தல் மற்றும் மாநில தீர்ப்பாணையம் அறிவித்த தீர்ப்பானையை மாற்றுதல்.<br>❖ மாவட்ட மன்றம் மற்றும் மாநில தீர்ப்பாணையத்திடமிருந்து தேவையான ஆவணங்களை கேட்டு பெற்று, அதனடிப்படையில் உரிய ஆணைகள் பிறபித்தல்.<br>**அதிகாரங்கள்**<br>❖ தேசிய தீர்ப்பாணையம் புகார் மனுக்களை விசாரிக்கும் முறைகளில் ஒருமித்த செயல்முறைகளை பின்பற்ற தனது அதிகாரத்தை செலுத்துதல்.<br>❖ எதிர் கட்சிகளுக்கு ஒரு கட்சியால் தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் படிகளை வழங்குவதில் முன்னுரிமை.<br>❖ தேசிய ஆணையத்தால் விரைவாக ஆவணப் படிகளை வழங்கப்பட ஆணை பிறப்பித்தல்.<br>❖ நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட தனது அதிகாரங்களை பயன்படுத்துதல் ஆணையம் மற்றும் மாவட்ட மன்றங்களின் செயல்பாட்டை அவர்களின் தன்னிச்சையாக செயல்பட அவைகளின் அதிகாரத்தில் தலையிடாது இருத்தல்.<br>**மேல்முறையீட்டு மன்றம்** : | |


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | |
|---|---|---|
| | ❖ நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 23ன் கீழ் தேசிய தீர்பாணையம் கொடுத்த தீப்பிணை எதிர்த்து பாதிக்கப்பட்ட நபர் தீர்ப்பை பெற்ற 30 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் முறையீடு செய்யலாம் | |
| 23. | **வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகள்( ஏதேனும் ஐந்தினை விவரி)**<br>❖ நிதி அளிப்பவர்கள்<br>❖ சரக்கு விற்பனையாளர்கள்<br>❖ சந்தையிடுகை இடைநிலையர்கள்:<br>❖ மக்கள்<br>❖ வாடிக்கையாளர்கள்:<br>❖ போட்டியாளர்கள் | 5 |
| | **(அல்லது)**<br>**தாராளமயமாக்களின் நன்மை தீமைகள்:** ( ஏதேனும் ஐந்தினை விவரி)<br>**நன்மைகள்( ஏதேனும் மூன்று)**<br>❖ வெளி நாட்டு முதலீடுகள் அதிகரிப்பு:<br>❖ அந்நியசெலாவணி இருப்பு அதிகரிப்பு<br>❖ நுகர்வு அதிகரிப்பு<br>❖ விலைகட்டுப்பாடு<br>❖ வெளி நாட்டில்பெறும் கடன்களை குறைக்கிறது<br>**தாராளமயமாக்கலின் குறைப்பாடுகள் ( ஏதேனும் மூன்று)**<br>❖ வேலையின்மையை அதிகரித்தல்<br>❖ உள்நாட்டு தொழில்அலகுகளின் இழப்பு<br>❖ அயல்நாடுகளை சார்ந்த திருத்தலை பெருக்கும்:<br>❖ சமநிலையற்ற வளர்ச்சி: | |
| 24. | **நிபந்தனை மற்றும் நம்புறுதிகள் வேறுபாடு** | 5 |

| வரிசை எண் | வேறுபடுத்தும் கூறுகள் | நிபந்தனைகள்Conditions | நம்புறுதிகள்Warranties |
|---|---|---|---|
| 1. | பொருள் | ஒப்பந்தத்தின் கருப் பொருளாகத் திகழ்வது. | நம்புறுதி ஒப்பந்தத்திற்குத் துணையாக இருக்கிறது. |
| 2. | முக்கியத்துவம் | ஒப்பந்தத்தில் நிபந்தனையை மீறுவது ஒப்பந்தத்தை மீறுவதாகக் கொள்ளப்படுகிறது. | நம்புறுதியை மீறுவது ஒப்பந்தத்தினை மீறுவதற்கு ஒப்பாகாது. |
| 3. | உரிமைமாற்றம் | நிபந்தனை நிறைவோறாமல் உரிமை மாற்றம் நிகழமுடியாது. | நம்புறுதியை நிறைவேற்றாமல் உரிமைமாற்றம் |


Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | | |
|---|---|---|---|
| | | | நிகழமுடியும். |
| 4. | பரிகாரம்/தீர்வு | நிபந்தனை மீறுவதdhல் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்ட நபர் ஒப்பந்தத்தை நீக்கிக் கொள்வதுடன் நட்டஈடு கோரும்உரிமையைப் பெறுகிறார். | நம்புறுதியை மீறுவதனால் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்டவர் நட்ட ஈடு கேட்கும் உரிமையை மட்டுமே பெற்றுள்ளார். |

**அல்லது**

**காசோலையின் இயல்புகள்** ( ஏதேனும் ஐந்தினை விவரி)

- காசோலை எழுத்து வடிவில் இருக்கவேண்டும்
- நிபந்தனையற்ற ஆணை
- குறிப்பிட்ட வங்கியர் மீது வரையப்படுதல்
- நிச்சயமான ஒரு தொகை
- பணம் பெறுபவரைத் திட்டவட்டமாக குறிப்பிடவேண்டும் .
- கேட்டவுடன் தருமாறு எழுதப்படுவது .
- எழுதுபவர் கையொப்பம்

**********


DEPARTMENT OF COMMERCE

ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்),

எலச்சிப்பாளையம், திருச்செங்கோடு(வட்டம்),

நாமக்கல் (மாவட்டம்)-637 202.

அலைபேசி : 99655-31727, 99655-35967

***********




Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593